பக்கங்கள் 16 + 2

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 03 ஞாயிற்றுக்கிழமை 20.10.2024 | அதிர்வு 80

## போதை விருந்து; 30 பேர் சிக்கினர்

(நுவரெலியா நிருபர்)



நுவரெலியா, கிரகறி வாவி கரையோரத்தில் உள்ள ஹோட்டலொன்றில் இடம் பெற்ற பேஸ்புக் களியாட்ட 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தந்தை, தாய், மகள் தீ விபத்தில் மரணம்



வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

சிலாபம், சிங்கபுர பகுதியில் வீடொன்றில் நேற்றிரவு இந்தத் தீ விபத்து ஈர்பட்டுள்ளது.

42 வயதான தந்தை, 40 வயதான தாய் மற்றும் அவர்களின் 15 வயது மகள் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## அநுரவுக்குக் கம்மன்பில மீண்டும் காலக்கெடு!

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான இரண்டு விசாரணை அறிக்கைகளையும் ஜனாதிபதி நாளை திங்கட்கிழமை வெளியிட வேண்டும். அவ்வாறு இல்லையேல் அவற்றை நான் வெளியிடுவேன்.” – என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மீண்டும் 02

# தமிழரசை வெல்ல வைக்க வேண்டும்



## இளைய தலைமுறையினரிடம் வேட்பாளர் சிறீதரன் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)


“எமது இளைய தலைமுறையினர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெல்ல வைக்க வேண்டும்.”

- இவ்வாறு கோரிக்கை விடுத்தார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமாகிய சிவஞானம் சிறீதரன். 02

## லொஹான் ரத்வத்தவின் பிரத்தியேக செயலாளர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்பு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் பிரத்தியேக செயலாளராகக் கடமையாற்றிய ஒருவர், கட்டுகஸ்தோட்டையில் லொஹான் ரத்வத்தவுக்குச் சொந்தமான அலுவலகத்தின் அருகில் உள்ள வீடொன்றில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

அவரின் சடலம், உடற்கூற் 02





# தமிழரசின் வன்னி மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வு

(கி.வசந்தன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வேட்பாளர்களுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராஜா மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோர்கலந்து கொண்டனர்.

வன்னி மாவட்டத்தில் இம்முறை தமிழரசுக் கட்சி சார்பாக முன்னாள் வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் வைத்தியர் ப. சத்தியலிங்கம், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், ஆசிரியர் கா. திருமகன், சமூகச் செயற்பாட்டாளர் தே. சிவானந்தராசா, ஆசிரியர் பா. கலைதேவன், விரிவுரையாளர் ந. ரவீந்திரகுமார், ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் வ. கமலேஸ்வரன், சட்டத்தரணி செ.டினேசன், சட்டத்துறை மாணவி அந் தோனி டலிமா ஹலிஸ்ரா ஆகியோர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.





## தமிழரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி நகர வட்டார சமூகமட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில், நேற்று சனிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஈழத்தமிழர்களை அரசியல் வெறுமை சூழ்ந்த காலத்தே, இனத்துக்கே அடையாளம் தந்த 'தமிழ்த் தேசியத்தை' கொள்கையாக வரித்து நாம் ஆரம்பித்த அரசியல் பயணத்தை, அதே தளத்தில் நின்று பிறழாத பிரதிநிதிகளாக இதுவரை காலமும் முன்னெடுத்திருக்கின்றோம்.

தமிழ்த் தேசியம் மட்டுமே ஈழத்தமிழர்களுக்கான அடையாளம். அத்தகைய அடையாளத்தை நிரந்தரமாகப் பேணும் வகையிலான அரசியல் செல்நெறிகளின் மூலம், இனத்தின் இறைமையை மீட்கும் என் அரசியல் பணியும் பயணமும் தொடரும்.

எங்கள் அடையாளங்களை இழக்கத் துணியும் எந்த மாற்றங்களுக்கும் எமது இளைய தலைமுறையினர் உட்பட்டு விடக்கூடாது. எமது இளைய தலைமுறையினர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை இந்தத் தேர்தலில் வெல்ல வைக்க வேண்டும்." – என்றார்.

சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

## போதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வொன்று சுற்றிவளைப்பப்பட்டதில் போதைப்பொருட்களுடன் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர் .

நுவரெலியா பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் போதைப்பொருட்களுடன் பேஸ்புக் களியாட்ட நிகழ்வொன்று இடம்பெறுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கஞ்சா, ஐஸ், போதைப் பொருள் மாத்திரைகள், குஷ் போதைப் பொருள் மற்றும் சட்டவிரோதமாக வெளிநாட்டில் இருந்து நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட சிகரெட்டுகள் வைத்திருந்த 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் அனைவரும் ஆண்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் 20 முதல் 38 வயதுடையவர்கள் என்றும், அவர்கள் அனைவரும் வெளிப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## லொஹான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுப் பரிசோதனைக்காகக் கண்டி தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் சுடப்பட்டாரா? அல்லது தற்கொலை செய்து கொண்டாரா? என்பது பற்றி விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

## அநுரவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலக்கெடு விதித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான இரண்டு விசாரணை அறிக்கைகளையும் பகிரங்கப்படுத்தத் தயங்குகின்றார். அந்த அறிக்கைகளை வெளியிடுவதற்காக நான் ஜனாதிபதிக்கு வழங்கிய காலக்கெடு நாளை காலை 10 மணியுடன் முடிவடைகின்றது.

என்னைக் கைது செய்தால்கூட, நவீன தொழில்நுட்பம் ஊடாக அறிக்கைகளை வெளியிடுவதற்குத் தயார்." – என்றார்.



# சங்குப்பிட்டிப் பாலப் பகுதியில் விபத்து! ஒருவர் படுகாயம்!!

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சங்குப்பிட்டிப் பாலத்தை அண்மித்து வெள்ளிக்கிழமை (18) இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த நபர் பயணித்த மோட்டார்சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்துக்குள் பாய்ந்ததில் விபத்து சம்பவித்திருக் கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து இடம்பெற்று நீண்ட நேரமாக படுகாயமடைந்த நிலையில் கிடந்த நபரை அந்தப் பகுதி மக்கள் மற்றும் பொலிஸார் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச் சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். 44வயதான நபர் ஒருவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.





# முதியோர் தினத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம உதவிகள்

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி முதியவர்களுக்கு வழங்கவென தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஒரு தொகுதி படுக்கை விரிப்புகள், உடுபுடைவைகள் வழங்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாராந்த நிகழ்வில், உதவித் திட்டங்களாக, வடமராட்சி, பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களின் கோரிக்கைக்கு அமைவாக 87 ஆயிரத்து 500 ரூபா பெறு மதியான 35 பெட்சீட், 35 சேலைகள் என்பன வழங்கப்பட்டன.

உதவித் திட்டத்தை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை ஆங்கில போதனாசிரியர் ச. விநாயகமூர்த்தி, வடமராட்சி கந்த புராணக்கழக ஏற் பாட்டாளர் பெ.ஐங்கரன் ஆகியோர் பிரதேச செயலகங்களின் அதிகாரிகளிடம் வழங்கி வைத்தனர்.







# அக்கரைப்பற்றில் நடைபெற்ற டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள்

(றிஸ்வான் சாலிஹு)

அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட காதிரிய்யா வட்டாரத்தில் நேற்று சனிக் கிழமை (19) அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம். முனவ்வர் தலைமையில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வும், களப்பரிசோதனையும் நடைபெற்றன.



இந்தப் பிரதேசத்தில் உள்ள வீடுகளுக்கு வைத்திய அதிகாரி தலைமையில் சென்ற குழுவினர், டெங்கு நுளம்பின் குடம்பிகள் உருவாகக் கூடிய இடங்களைக் கண்டறிந்து இவைகள் உருவாக காரணமாக இருந்த பொருள்களை அகற்றாமல் இருந்த வீட்டு உரிமையாளருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை அறிவுறுத்தல் விடுத்தனர்.

அத்தோடு, வீட்டுச் சூழலில் காணப்படும் பொலிதீன் உறைகள், சிரட்டைகள், யோக்கட் கப்கள், மட்பாண்டங்கள், வாகன டயர்கள் போன்றவற்றை அகற்றுமாறும், நீர் தேங்கி நிற்கக் கூடிய இடங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறும் பொது மக்களுக்கு அறிவுரை கொடுக்கப்பட்டது.

இக்கள விஜயத்தில், பிரதேச உதவி செயலாளர் றாசீத் யஹ்யா, டாக்டர் சபீனா ஹம்தூன், சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், இளைஞர் கழகத்தினர், விளையாட்டு கழகத்தினர் மற்றும் சமூக சேவை அமைப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வெற்றுவேட்டு அலப்பறை

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒருவாறு அதிகாரத்தைக் கைப்பற்றும் வரை அநுரகுமார திஸாநாயக்கவும் அவரது தேசிய மக்கள்சக்தி கட்சியினரும் முன்னெடுத்த அலப்பறை அதிகம்.

ஊழல், மோசடி, பதவித் துஷ்பிரயோகம், அரச சொத்துக்கள் சூறையாடல் போன்ற பல்வேறு முறைகேடுகளில் முன்னைய ஆளும் தரப்பினர் ஈடுபட்டனர் என்று வரிசையாக நீண்ட பட்டோலைகளை மேடைக்கு மேடை அவர்கள் முழங்கினார்கள். இந்தக் குளறுபடிகள் மற்றும் கிரிமினல் குற்றங்கள் இழைத்தவர்களை விரைந்து சட்டத்துக்கு முன் கொண்டு வந்து நிறுத்தி, உண்மைகளை அம்பலப்படுத்தி, பொறுப்பு கூறலை நிலைநாட்டி, ஒழுங்குபடுத்துவோம் என்று அவர்கள் தொடர்ந்து வாக்குறுதிகளை மக்களுக்கு வாரி வழங்கி வந்தார்கள்.

அந்தக் குற்றச்சாட்டுப் பட்டோலையின் அடிப்படையில்தான் அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள் என்று கூறுவதும் மிகையில்லை.

அதிகாரத்துக்கு வந்து இப்போது ஒரு மாதம் ஆகப் போகின்றது. ஆயினும் குற்றவாளிகளை மடக்கும் திசையில் ஏதேனும் முன்னேற்றம் இருப்பதாக மக்களுக்கு நம்பிக்கை தரும் சமிக்ஞைகள் எதுவும் கிடைக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் மதுபானசாலை உரிமங்கள் வழங்குவதில் இடம்பெற்ற ஊழல்கள் குறித்தும் தேசிய மக்கள் கட்சியினர் முழங்கினர். பொது மக்களும் கூட அவை பற்றி சடைமாடையாக விவரங்களை அறிந்திருந்தனர். ஆனால் புதிய ஆட்சிப் பீடம் அதிகாரத்துக்கு வந்து ஒரு மாதம் தாண்டும் வேளையில் கூட அந்த மதுபானசாலை உரிமங்கள் விடயத்தின் ஊழல்வாதிகள் யாரையும் அவர்களால் அம்பலப்படுத்த முடியவில்லை.

முன்னைய ஆட்சி காலம் குறித்து - குறிப்பாக ராஜபக்ஷக்கள் மீது - தேசிய மக்கள் சக்தியினர் குற்றச்சாட்டுகளை வாரிக் கொட்டினர்.

அந்த ராஜபக்ஷக்கள் தரப்பிலிருந்து நாமல் ராஜபக்ஷ இப்போது அந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசுக்கு சவால் விடுக்கின்றார். எங்கே உங்கள் குற்றச்சாட்டுகளை நிரூபியுங்கள் என்று அவர் ஆட்சியாளர்களை பார்த்துக் கிண்டல் அடிக்கின்றார். ஆயினும் இன்னமும் ஆளுந்தரப்பிலிருந்து காத்திரமான பதில் வரவில்லை.

எனினும், ஏதோ வெட்டி பிடுங்குவோம் என்ற முழக்கம் மாத்திரம் தொடர்ந்து புதிய ஆளும் தரப்பின் ஊதுகுழல்களிடமிருந்து வெளி வருகின்றன.

''தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் கள்வர்கள், கொலையாளிகள் தப்பவே முடியாது. உரிய வகையில் விசாரணைகள் நடத்தப்பட்டு, சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் பீதியடைந்துள்ள சிலரே, தற்போது கூச்சலிடுகின்றனர்.''

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது போன்ற கருத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் நேற்றுக் கூறியிருக்கின்றார்.

பல்வேறு சிக்கல்கள் காரணமாக முன்னர் மூடப்பட்டிருந்த ஏறத்தாழ 400 ஊழல் கோப்புகளை அரசாங்கம் மீண்டும் திறந்துள்ளதாகவும் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார். ஊழலில் ஈடுபட்ட அனைவருக்கும் எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

தவறு செய்பவர்களை பொறுப்புக்கூற வைப்பதில் தேசிய மக்கள் சக்தியின் உறுதிப்பாட்டை கேள்வி எழுப்பும் விமர்சகர்களை நோக்கி அவர், "தவறு செய்தவர்களை தண்டிக்க தேசிய மக்கள் சக்தி என்ன செய்தது என்று கேள்வி கேட்பவர்கள், நாங்கள் திருடர்களைப் பிடிக்கத் தொடங்கும் போது புலம்ப வேண்டாம்" என்று குறிப்பிட்டார்.

அலப்பறை தொடர்கின்றது. அது மட்டும் போதுமானதல்ல. செயலிலும் விடயங்கள் நிறைவேற வேண்டும். நிறைவேற்றிக் காட்டப்பட வேண்டும்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

GUNAAM'S SUPER MARKET

## Gunams super market super deal

**18, 19, 20/10/2024**

100 $ மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு Maggi real coconut milk powder இலவசம்




Open until 10:00 PM.

1145 Morningside Ave, Toronto, ON M1B 0A7

Contact : 416 283 9998





# சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் துஷ்பிரயோகத் தடுப்புப் பணியகம்!

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று (19) சனிக்கிழமை பிற்பகல் சிறுவர், மகளிர் துஷ்பிரயோகத் தடுப்புப் பணியகம் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் இடம்பெற்ற திறப்புவிழா நிகழ்வில் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய கலந்து கொண்டு சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகத்தை திறந்து வைத்திருந்தார்.

நிகழ்வில் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தனபால, யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காலிங்க ஜெயசிங்க மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூசன் சூரியபண்டார ஆகியோர் கலந்து கொண்டனர்.




# காரைதீவில் மாதர் உற்பத்தி பொருள்களின் கண்காட்சி

(வி.ரி.சகாதேவராஜா)

தொழில் முயற்சிகளுக்கு பெண்களை வலுவூட்டல் எனும் தொனிப்பொருளின் கீழ், மாதர் உற்பத்தி செய்த பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் காரைதீவில் இடம் பெற்றன.

காரைதீவுப் பிரதேச செயலாளர் கோ.அருணனின் தலைமையில் நிகழ்வு நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவஞானம் ஜெகராஜன் கலந்து கொண்டார்.

அங்கு மாதர் அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தினரால் உற்பத்தி செய்த பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனையும் செய்யப்பட்டது .

இதன்போது காரைதீவு பிரதேச மாதர் சங்கங்களால் முன்னாள் பிரதேச செயலாளரும் தற்போதைய மாவட்ட மேலதிக அரச அதிபருமான சிவ.ஜெகராஜன் மற்றும் சிறப்பாக பயிற்சிகளை முடித்த மாணவர்கள் அதன் ஆசிரியர் மற்றும் மாதர் அபிவிருத்தி சங்க தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர்கள் கௌரவப்படுத்தப்பட்டனர்.





# ஜெயசிறிலின் தேர்தல் பிரச்சாரம் ஆரம்பம்!

இலங்கை தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறிலின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மதத்தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பமானது.

முதலில் வேட்பாளர் ஜெயசிறில் மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜியிடம் சென்று இராமகிருஷ்ண ஆலயத்தில் ஆசீர்வாதத்தை பெற்றார்.

பின்னர் காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்களிடம் ஆசி பெற்றார். பின்னர் காரைதீவு எய்ம்ஸ் தேவாலய போதகர் கிறிஸ்தோப்பரிடம் ஆசிர்வாதம் பெற்றார்.

அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்கள் எங்கும் இந்தத் தேர்தல் பிரச்சாரம் இடம்பெற்று வருகின்றது.






# ஐக்கிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்று பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அமைக்கும்

## வேட்பாளர் அமான் அஸீஸ் தெரிவிப்பு

(எம்.ஏ.றமீஸ், ஏ.எல்.றியாஸ்)

இம்முறை இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்று பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அமைக்கும்.

சிலர் நினைப்பது போன்று வேறு எந்தவொரு கட்சியாலும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளவே முடியாது. மாற்றுக் கட்சியினர் தாம் வெற்றி பெற்று ஆட்சி அமைப்போம் எனப் பகல் கனவு கண்டு கொண்டிருக்கின்றன. இந்தக் கனவு ஒரு போதும் பலிக்கப் போவதில்லை.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.பி.ஏ.அஸீஸின் புதல்வரும், ஐக்கிய மக்கள் சக்கியின் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தின் முதலாம் இலக்க வேட்பாளருமான அமான் அஸீஸ் இவ்வாறு தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (18) மாலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் உள்ள அனைத்து இன மக்களுக்கும் பல்வேறான பிரச்சினைகளும் தேவைகளும் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்யக் கூடிய சக்கி ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு மாத்திரமே உள்ளது. மாற்றுக் கட்சியினர் பகல் கனவு காண்பது போன்று அக்கட்சியினரால் ஆட்சி அமைக்கவே முடியாது.

இந்த முறை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் போது எமது கட்சி மக்களோடு மக்களாகச் செயற்படக் கூடிய பிரபல்யம் மிக்கவர்களையும், அரசியல் அனுபவம் மிக்கவர்களையும் களமிறக்கியுள்ளது. மக்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகள் போன்றவற்றை நிவர்த்திக்க வேண்டுமாக இருந்தால் மக்களோடு மக்களாக இரண்டறக் கலந்தவர்கள் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டும். வெறுமனே கட்சித் தொண்டர்கள் என்று கூறிக் கொண்டு மக்கள் முன் வராதவர்களால் இந்தத் தேர்தலில் வெற்றி பெறவே முடியாது.

பொத்துவில் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பல்வேறுபட்ட அரசியல்வாதிகள் காலத்துக்குக் காலம் இங்கு வருகை தந்து பல்வேறான வார்த்தை ஜாலங்களைக் காட்டி எம் மக்களின் வாக்குகளை சூறைசாடிச் சென்று இங்குள்ள மக்களை ஏமாற்றி வந்துள்ளனர். இங்குள்ள மக்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள் உள்ளன. அந்தப் பிரச்சினைகள் ஒன்றும் இதுவரையில் எந்தவொரு அரசியல்வாதிகளாலும் தீர்த்து வைக்கப்படவில்லை.

சில அரசியல்வாதிகள் இந்தப் பகுதி மக்களைப் பொய் வார்த்தைகள் கூறி ஏமாற்றியதையும், வாக்குறுதிகள் வழங்கி நிறைவேற்றாமல் போனதையும் இம்மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

தீர்வைப் பெற்றுத் தருவேன் எனக் கூறியவர்களால் எந்தவொரு தீர்வும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. அவர்களின் சுய நலத்துக்காகவும், சுக போகங்களை அனுபவிப்பதற்காகவும் மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்திய வரலாறுகளையும் மக்கள் கண்ணூடாக கண்டு கொண்டுள்ளனர்.

கடல் நீரை குடிநீராக்கித் தருவோம், கல்வி வலயத்தை ஏற்படுத்தித் தருவோம், எல்லைப் பிரச்சினைகளை தீர்த்துத் தருவோம், விளையாட்டு மைதானங்களை ஏற்படுத்தித் தருவோம், வாழ்வாதரத்தை உயர்த்துவோம், மீனவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்போம், விவசாய செயற்பாடுகளை விஸ்வதரித்துத் தருவோம் என்றெல்லாம் பல்வேறான பசப்பு வார்த்தைகளை கூறி காலத்துக்குக் காலம் மக்களை உணர்ச்சி வசப்படுத்தி வாக்குகளை பெற்றுக் கொண்டு செல்பவர்களாகவே அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள். தவிர மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான எந்தவொரு நகர்வுகளையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. அவர்கள் செய்யாமல் சென்ற அனைத்து விடயங்களையும் நான் இப்பகுதி மக்களுக்காக செய்து தர உறுதியாக உள்ளேன்.

எனது தந்தை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பிர் மர்ஹூம் எம்.பி.ஏ.அஸீஸ் பொத்துவில் மக்களுக்காக பல்வேறான அபிவிருத்திப் புரட்சிகளை மேற்கொண்டவர். அவரின் மக்கள் நலச் செயற்பாடுகளை இப்பகுதி மறந்துவிடவில்லை.

பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அவர் ஏற்படுத்தியுள்ளார். சிறு சிறு குடியேற்றக் கிராமங்களை ஏற்படுத்தி அம்மக்களின் வாழ்வதார விடயங்களை நிலையாக உருவாக்கியுள்ளார். எனது தந்தையால் உருவாக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தைச் சிலர் தமக்காகச் சொந்தமாக்கி விளையாட்டு மைதானத்தையே இல்லாமல் செய்துள்ளனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்வதன் மூலம் பொத்துவில் பிரதேசத்தில் காணப்படும் அனைத்து தேவைகளையும் மக்கள் நலனுக்காக சுயநலம் பாராமல் செய்வதற்கு தயாராக உள்ளோம். அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து இன மக்களின் தேவைகளையும் அடையாளப் படுத்தி வைத்திருக்கிறோம். அவைகளை நிவர்த்தி செய்வதற்கான வாய்பை எமக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.– என்றார்.

# இலவசங்களுக்கு சோரம் போனால் ஐந்து வருடங்களும் சூனியமாகும்!

## ஊடகச் சந்திப்பில் வேட்பாளர் வினோகாந்த்

(வி.ரி.சகாதேவராஜா)

தேர்தல் என்றவுடன் இலவசங்களுக்கு குறைவில்லை. ஆனால் அந்த இலவசங்களுக்கு சோரம் போனால் அடுத்த ஐந்து வருடங்களும் சூனிய மாகும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் வெள்ளையன் வினோகாந்த் தெரிவித்தார்.

காரைதீவில் அமைந்துள்ள அம்பாறை ஊடக மையத்தில் அவரது ஊடக சந்திப்பு இடம் பெற்ற பொழுது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் கோபத்துடன் ஏனைய கட்சிகளை வெறுத்து ஒரு கட்சியை ஆதரித்தார்கள்.




ஆனால் அந்த கட்சி இன்று ஏட்டுச் சுரைக்காய் போன்று ஆகிவருகிறது.

எதிர்க்கட்சித் தலைவராய் இருந்தும் நாட்டில் சகல மக்களுக்கும் பல அரிய சேவைகளை செய்தவர் சஜித் பிரேமதாஸ. அவரை பிரதமர் ஆக்க நாங்கள் அனைவரும் களமிறங்கி உள்ளோம்.

வடக்கு, கிழக்கில் அவர் தான் கடந்த தேர்தலில் வெற்றி பெற்றவர். இம் முறையும் அவர்தான் நாட்டிலேயே வெற்றி பெற இருக்கின்றார். அவர்தான் பிரதமராக வருவார்.

அவர் ஆரம்பித்த வீட்டுத் திட்டத்தை பின்னர் வந்த யாருமே முன்னெடுக்க வில்லை. தமிழர் பிரதேசம் எந்த வளமும் இன்றி குடி தண்ணீர் வசதியின்றி அல்லல் படுகின்றது .

இன்னும் இனம் மொழி தேசியம் என்று வந்து வாழ்க்கையைப் பழுதாக்காமல் சஜித்துக்கு வாக்களித்து நாங்கள் முன்னேற வேண்டும்.

இம் முறையும் தமிழர்களுக்கு சீற் கிடையாது. ஆனால் நாம் தமிழருக்காக செயற்படுவோம். – என்றார்.

# அகில இலங்கை பாடசாலைகளின் 100 மீற்றர் ஓட்டத்தில் முதலிடம்!

(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டிகளில் ஆண்களுக்கான 18 வயதுக்கு உட்பட்ட 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் கற்பிட்டி நிர்மலமாதா சிங்கள மகா வித்தியாலய மாணவன் மலித் தருஷன் முதலிடம் பிடித்து பாடசாலை வரலாற்றில் சாதனை படைத்துள்ளார்.

கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அமைச்சின் அனுசரணையில் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டிகள் நேற்று (19) கொழும்பு சுகததாச சர்வதேச விளையாட்டரங்கில் இடம் பெற்றன.

இதில் 18 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 100 மீற்றர் குறுந்தூர ஓட்டப் போட்டியில் வடமேல் மாகாணத்தின் சம்பியனான கற்பிட்டி நிர்மலமாதா சிங்கள மகா வித்தியாலய மாணவன் டபில்யூ. சீ. டீ. மலித் தருஷன் இறுதிப் போட்டியில் போட்டித் தூரத்தை 10.96 செக்கன்களில் நிறைவு செய்து முதலிடம் பெற்றார். தனது அதி சிறந்த




நேரப் பெறுபேற்றையும் நிலைநிறுத்தி சாதனை படைத்தார்.

கற்பிட்டி நிர்மலமாதா சிங்கள மகா வித்தியாலயத்தின் பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக மெய் வல்லுனர் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றமை இதுவே முதல் முறை எனவும் இவ் வெற்றிக்கு துணை நின்ற அப்பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியை எச்.பி.கே. ராஜபக்ஷ மற்றும் பெற்றோருக்கும் பாடசாலை நிர்வாகம் சார்பாக பாடசாலையின் அதிபர் சுதர்சன தமது வாழ்த்துக்களைத் தெரிவித் துள்ளார்.








# ஈழத் தமிழ் ஊடகவியலாளர் நினைவு நாள் மட்டக்களப்பில்!

(பழுவூரான்)

ஈழத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் சர்வதேச நினைவு நாள் மற்றும் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் நினைவு தினமும் நேற்று சனிக்கிழமை (19) மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் நினைவுத் தூபியில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம் மற்றும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து இந்த நினைவு கூரலை ஏற்பாடு செய்திருந்தன.

மேற்படி அமைப்புக்களின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவு கூரலில் படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் திருவுருவப் படத்திற்கு மட்டு.ஊடக அமையத்தின் தலைவர் வா.கிருஸ்ணகுமார் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். கங்காதரன் ஆகியோர் இணைந்து மலர்மாலை அணிவித்தனர்.

இதன் போது ஊடகரின் நினைவாக அகல் விளக்கேற்றி,மலர் தூபி, அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் மாவட்ட சிவில் சமூகச் செயற்பாட்டாளர் எஸ்.சிவயோ கநாதன் மற்றும் மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# நாட்டை அழித்தோருக்குத் துணை போனோரை ஒருபோதும் இணைத்துக்கொள்ளப் போவதில்லை

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரம்

(த.சுபேசன்)

நாட்டை நாசம் செய்தவர்களுக்குத் துணை போனவர்களை ஒருபோதும் நாம் இணைத்துக் கொள்ள மாட்டோம் என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இ.சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை சாவகச்சேரி நகரில் தேசிய மக்கள் சக்தி அலுவலகம் திறந்து வைக்கப்பட்ட போதே பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அவர் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க எடுக்கும் நடவடிக்கைகளை வெற்றி பெறச் செய்ய வேண்டுமானால் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இருந்தும் தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிடுபவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

யாழ்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கப் பல இளைஞர்கள் தயாராக உள்ளனர். எம்மோடு அணி திரண்டு வருகின்றனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளுக்கு வயிற்றுக் குடைச்சல் ஏற்பட்டு விட்டது.




அவர்கள் மக்களிடம் இனவாதம் பேசி மக்களை சூடேற்றி வாக்கைப் பெறப் பார்க்கின்றனர்.

இனிமேலும் அவர்களுடைய பேச்சைக் கேட்க மக்கள் தயாராக இல்லை.

76வருடங்களாக தமிழ் கட்சிகளுக்கு வாக்களித்து தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ்கின்றனரா?

மக்களுடைய வாழ்க்கையை மாற்றுகின்ற வேலைத் திட்டம் தமிழ்க் கட்சிகளிடம் கிடையாது. இனவாதம் ஒன்றே அவர்களின் ஒரே மூலதனம்.

உலகம் எங்கோ போய்விட்டது. ஆனால் நாம் எங்கோ நிற்கிறோம். தமிழ் கட்சிகள் பிளவடைந்து நிற்கின்ற போதிலும் தமிழர்களின் மானம் காக்க தமிழருக்கு வாக்களியுங்கள் என்கின்றனர். மக்களை தடுமாறச் செய்பவையாகவே தமிழ்க் கட்சிகள் காணப்படுகின்றன.

அதேசமயம் முன்னாள் அமைச்சர் ஒருவர் மண் கடத்தல் செய்து, கடலை கொள்ளையடித்து யார் ஆட்சிக்கு வந்தாலும் தான் அமைச்சராகிவிடலாம் என்ற கனவில் உள்ளார்.

முன்னை நாள் அமைச்சர் அவர்களே மன்னித்துக் கொள்ளுங்கள். தேசிய மக்கள் சக்தி நாட்டை நாசம் செய்தவர்களுக்கு துணை போனவர்களை ஒருபோதும் இணைத்துக் கொள்ளாது.- என்றார்.



# அரச கட்சி உப அலுவலகம் பேசாலையில் திறந்துவைப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தீவுப் பகுதிக்குள் முன்னெடுக்கப்பட்டு வரும் கனியவள மணல் அகழ்வு மற்றும் இந்தப் பகுதி மக்களை பாதித்து வரும் மின் காற்றாலைகள் அமைக்கும் திட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என பேசாலை மக்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் பேசாலைப் பகுதியில் வியாழக்கிழமை (17) தேசிய மக்கள் சக்தி உப அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டபோதே மேற்குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த அலுவலகத்தைத் தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட வேட்பாளர்கள் அன்ரன் கமிலஸ் மற்றும் இராமையா ராதாகிருஸ்ணன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இதைத் தொடர்ந்து தேசிய மக்கள் சக்தியின் பேசாலை ஒருங்கிணைப்பாளர் கொணோரியஸ் சிராய்வாவின் ஏற்பாட்டில் பேசாலை ஜோன் மேரி சுற்றுலா விடுதியில் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் நிசங்க மற்றும் இளைஞரணி உறுப்பினர்கள் கட்சியின் ஆதரவாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவன உறுப்பினர்கள், ஊர்த் தலைவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட வேட்பாளர்களின் அறிமுகவுரை இடம்பெற்றதோடு. சமகாலத்தில் மன்னார்த்தீவுப் பகுதியில் மக்கள் பாரியளவில் முகம் கொடுத்துவரும் கனியவள மண்ணகழ்வு மற்றும் காற்றாலைப் பிரச்சினைகள் மக்களால் முன்வைக்கப்பட்டன.

இதன் போது புதிய ஜனாதிபதியின் அதிரடி நடவடிக்கைகள் தங்களுக்கு மிகவும் திருப்தியளிப்பதாகவும் முக்கியமாக ஊழலற்ற அரசை உருவாக்க முனைவது தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.





இந்த விடயத்தையும் அவர் கருத்தில் கொண்டு மன்னார் மக்களுக்காக இந்தக் கனிய மண்ணகழ்வு மற்றும் காற்றாலைத் திட்டங்களை நிறுத்துவார் என்று தாங்கள் நம்புகின்றனர் என்றும் மக்கள் தெரிவித்தனர்.



### யஹ்யா சின்வரின் இறுதிக் கணங்கள் :

# ஹமாஸுக்கு பலத்த இழப்பாயினும் மீள எழுமா ?

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

(கடைசி கணங்களில் இறக்கும் தறுவாயில் கூட, தன்னைத் தாக்கி வீடியோ எடுத்த ட்ரோன் மீது மர கட்டையை எறிந்து இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிரான தனது கடைசி எதிர்ப்பை யஹ்யா சின்வர் காட்டியுள்ளார்.

சின்வரின் மரணம் பாலஸ்தீன போராட்டத்தின் சின்னமாக மாறி இருக்கிறது. அவர் வீர மரணம் அடைந்துள்ளார். உயிர்த் தியாகம் செய்த யாஹியா சின்வர் தனது கொள்கையில் உறுதியானவர், தைரியமானவர். பாலஸ்தீன விடுதலைக்காக அவர் உயிர்த் தியாகம் செய்துள்ளார்.

அவர் தனது முடிவைத் தைரியத்துடன் சந்தித்தார். கடைசி மூச்சுவரை அவர் போராடியுள்ளார். அவர் தனது வாழ்க்கை முழுவதையும் பாலஸ்தீன விடுதலைக்கான போராளியாகவே வாழ்ந்துள்ளார் என பாலஸ்தீன மக்கள் தெரிவித்துள்ளனர்.)

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் தலைவரான யஹ்யா சின்வர் (லுயாலய ளுைைறெயச) கொல்லப்பட்டார் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மிக வீராப்புடன் தெரிவித்துள்ளார்.

தெற்கு காசாவில் ஒரு மறைவிடக் கட்டடத்தில் நடைபெற்ற தாக்குதலில் ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த மூன்று பேர் கொல்லப்பட்டனர் என்றும் அதில் ஹமாஸ் தலைவரான யாஹ்யா சின்வரும் ஒருவர் என்றும் இஸ்ரேல் பின்னர் உறுதிப்படுத்தியுள்ளது.

### இஸ்ரேலின் நீண்டகால எதிரி பலி!

உயிரிழந்தது ஹமாஸ் தலைவர் தானா என்பதை உறுதி செய்ய 62 வயதான சின்வரின் விரல் ஒன்று வெட்டப்பட்டு இராணுவ ஆய்வுக்கும் அனுப்பப்பட்டது.

யாஹியா சின்வர் தலையில் துப்பாக்கி குண்டு தாக்கி ஏற்பட்ட காயத்தால் உயிரிழந்துடன், ஒரு சிறிய வகை ராக்கெட் அல்லது தாங்கி குண்டு தாக்குதலுக்கு உள்ளான பின்னர் அவரது முன்னங்கை உடைந்து ரத்தப்பெருக்கு ஏற்பட்டது.

மின்சார கம்பியைப் பயன்படுத்தி அவர் ரத்தப் பெருக்கை நிறுத்த முயற்சி செய்துள்ளார். ஆனால் அது முழுவதுமாக பலனளிக்கவில்லை.

சின்வர் இறந்து 24 முதல் 36 மணி நேரத்துக்கு பின்னர் உடற்கூற்றாய்வு மேற்கொள்ளப்பட்டது. அது முடிந்தவுடன் சின்வரின் உடல் இஸ்ரேல் ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதனை அவர்கள் யாரும் அறியாத இடத்துக்கு தற்போது கொண்டு சென்றுள்ளார்கள்.

### இஸ்மாயில் ஹனியே ஈரானில் கொலை

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர் சின்வர் என இஸ்ரேல் குற்றஞ்சாட்டி வந்தது.

கடந்த சில மாதங்ளுக்கு முன்பு ஹமாஷ் அமைப்பின் தலைவரான இஸ்மாயில் ஹனியே ஈரானில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அந்த அமைப்பின் தலைமையை ஏற்ற சின்வர் இஸ்ரேல் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்தி வந்தார்.

தற்போது ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பின் பல முக்கிய தளபதிகள் கொல்லப்பட்ட நிலையில், இஸ்ரேல் மக்கள் மீது பல தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்ட ஹமாஸ் தலைவர் யாஹியா சின்வர் (62) மட்டும் இஸ்ரேல் ராணுவத்திடம் இருந்து நீண்டகாலமாகத் தொடர்ந்து தப்பி வந்தார்.

மக்களோடு மக்களாக அவர் கலந்திருந்ததால், அவர் பிடிபடவில்லை. அவரை உயிரோடு அல்லது பிணமாக மீட்கும் வரை ஓயமாட்டோம் என இஸ்ரேல் ராணுவம் சபதம் செய்திருந்தது.

தொடர்ச்சி ▼





# ஹமாஸுக்கு பலத்த இழப்பாயினும் மீள எழுமா ?

**தொடர்ச்சி▲**

**புதிய தலைவர் நியமனம்**

இஸ்ரேல் ராணுவ தாக்குதலில் ஹமாஸ் தலைவர் யாஹியா சின்வர் கொல்லப்பட்டதை ஹமாஸ் அமைப்பு உறுதிப்படுத்தியது. இதையடுத்து ஹமாஸ் அமைப்பின் புதிய தலைவராக கலீல் அல்–ஹய்யா நியமிக்கப்பட்டார்.

அவர் அளித்த பேட்டியில், உயிர்த் தியாகம் செய்த யாஹியா சின்வர் தனது கொள்கையில் உறுதியானவர், தைரியமானவர். பாலஸ்தீன விடுதலைக்காக அவர் உயிர்த் தியாகம் செய்துள்ளார். அவர் தனது முடிவை தைரியத்துடன் சந்தித்தார். கடைசி மூச்சுவரை அவர் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளார். அவர் தனது வாழ்க்கை முழுவதையும் போராளியாகவே வாழ்ந்துள்ளார் என குறிப்பிட்டார்.

**இஸ்ரேல் பலமுனைத் தாக்குதல்**

இஸ்ரேல் ஹமாஸ் இடையே நீண்ட நாள்களாகப் போர் நடைபெற்றுவரும் நிலையில் தற்போது இஸ்ரேலுக்கு எதிராக பல அமைப்புகளும் நாடுகளும் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் கடந்த சில நாள்களாகவே மத்திய கிழக்கில் போர் மேகம் சூழ்ந்து இருக்கிறது.

இஸ்ரேலுக்கு எதிராக, லெபனானின் ஹிஸ்புல்லா, ஏமனின் ஹவுத்தி, ஈரான் உள்ளிட்டவை தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் பலமுனை தாக்குதல்களை நடத்த வேண்டிய நிலை இஸ்ரேலுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நடந்த ஹிஸ்புல்லா அமைப்பினரை குறிவைத்து நடத்தப்பட்ட பேஜர் தாக்குதலில் ஏராளமானோர் பலியாயினர்.

இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் ஹிஸ்புல்லா மீது தாக்குதலை தொடங்கியது. போர் விமானங்கள், ராக்கெட் உள்ளிட்டவை மூலம் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில் 2000 இற்கும் மேற்பட்டோர் பலியானதாக கூறப்படுகிறது.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதனால் இரு நாடுகளுக்கு இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான போரில் முக்கிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

**சின்வர் கொல்லப்பட்ட இறுதிக் கணம்**

சின்வர் கொல்லப்பட்ட வீடியோவை பகிர்ந்துள்ள பெஞ்சமின் நெதன்யாகு அரசு, சாத்தானுக்கு பெரிய அடியை இஸ்ரேல் கொடுத்துள்ளது, எங்கள் இலக்கு இன்னும் முழுமையாக முடியவில்லை என தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அவரது கடைசி நிமிட வீடியோக்களை வெளியிட்டு இஸ்ரேல் மிகப்பெரிய தவறு செய்துவிட்டது என்று விமர்சனங்கள் தற்போது எழுந்துள்ளது. சின்வர் கொல்லப்பட்ட வீடியோ உலக அளவில் அதிகமாக பகிரப்பட்டு வருகிறது.

அவரின் இழப்பு இஸ்லாமிய போராளிகளிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சின்வரின் இறுதி தருணங்களை இஸ்ரேல் வெளியிட்டது தவறு என கடுமையான கண்டனங்களும் எழுந்துள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள பிரபல திரைப்பட இயக்குனரான டான் கோஹன் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சின்வர் தனது இறுதிக் கடமையை ஆற்றும் போது உயிரிழந்துள்ளார்.

மேலும் கடைசி நொடியில் கூட தன்னை வீடியோ எடுத்த ட்ரோன் மீது தடியை எறிந்து ஆக்கிரமிப்புக்கு எதிரான தனது கடைசி எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

**சின்வர் போராட்ட சின்னமாக**

சின்வரை பாலஸ்தீன மக்கள் பார்வையில் போராட்டத்தின் சின்னமாக மாற்றி இருக்கிறது. அவர் வீர மரணம் அடைந்துள்ளார் என்று மக்கள் கூறி வருகின்றனர். மேலும் இஸ்ரேல் தனது எதிரியை தற்போது தீர்த்து கட்டி இருந்தாலும், இந்த போராட்டம் இன்னும் முடிவடையவில்லை.

சின்வரின் மரணம் இஸ்ரேலுக்கு எதிராக ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்கின்றனர் பல போர் நிபுணர்கள்.

சில மாதங்களுக்கு முன்னர் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியே, ஈரானில் நடந்த தாக்குதலில் கொல்லப்பட்டதன் பின்னர், தெற்கு காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் உச்சபட்ச தலைவரான யாஹ்யா சின்வர் கொல்லப்பட்டதை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பெருமிதத்துடன் தெரிவித்துள்ளமை அரபு உலகில் கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

# எமக்கு செயல்மொழிதான் அரசியலுக்கான தாய்மொழி

## த.வெ.க. தலைவர் விஜய் தெரிவிப்பு

“அரசியல் களத்தில், வாய்மொழியில் வித்தை காட்டுவது நம் வேலை அன்று. நம்மைப் பொறுத்தவரை, செயல்மொழி தான் நமது அரசியலுக்கான தாய்மொழி. வி.சாலை என்னும் விவேக சாலையில் சந்திப்போம்.”

– இவ்வாறு த.வெ.க. கட்சியின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

ஒக்டோபர் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள த.வெ.க. மாநாடு குறித்து அக்கட்சியின் தலைவர் விஜய், தொண்டர்களுக்கு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“மாநாட்டுப் பணிகளுக்கான குழுக்களும் தொகுதிப் பொறுப்பாளர்கள் பட்டியலும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நம் முதல் மாநில மாநாடான வெற்றிக் கொள்கைத் திருவிழாவின் ஏற்பாடுகளில் நீங்கள் தீவிரமாக இருப்பது எனக்குத் தெரியும். அரசியலை, வெற்றி–தோல்விகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அளவிடாமல், ஆழமான அக உணர்வாகவும், கொள்கைக் கொண்டாட்டமாகவும் அணுகப் போகும் நம்முடைய அந்தத் தருணங்கள், மாநாட்டில் மேலும் அழகுற அமையட்டும்.

அரசியல் களத்தில், வாய்மொழியில் வித்தை காட்டுவது நம் வேலை அன்று. நம்மைப் பொறுத்தவரை, செயல்மொழி தான் நமது அரசியலுக்கான தாய்மொழி. மாநாட்டுக் களப்பணிகளில் மட்டுமல்லாமல், நம் ஒட்டுமொத்த அரசியல் களப் பணிகளிலும் நாம் அரசியல்மயப்படுத்தப்பட்டவர்கள் என்ற ஆழமான எண்ணத்தை மக்கள் மத்தியில் நீங்கள் உண்டாக்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. உற்சாகமும் உண்மையான உணர்வும் தவழும் உங்கள் முகங்களை மாநாட்டில் காணப் போகும் அந்தத் தருணங்களுக்காகவே என் மனம் தவம் செய்து காத்துக் கிடக்கிறது. இதை நீங்களும் அறிவீர்கள் என்று எனக்குத் தெரியும்.

இந்த நெகிழ்வான நேரத்தில், முக்கியமான ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். கழகத் தோழர்கள் எல்லோரையும் போலவே கர்ப்பிணிப் பெண்கள், பள்ளிச் சிறுவர் சிறுமியர், நீண்ட காலமாக உடல்நலமின்றி இருப்பவர்கள், முதியவர்கள் பலரும் தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் இருந்து நம் மாநாட்டுக்கு வரத் திட்டமிட்டு இருப்பர். அவர்களின் அந்த ஆவலை நான் மிகவும் மதிக்கிறேன். உங்கள் எல்லோருடனும் அவர்களையும் மாநாட்டில் காண வேண்டும் என்ற ஆவல்தான் எனக்கும் இருக்கிறது.

ஆனால், எல்லாவற்றையும்விட அவர்களின் நலனே எனக்கு மிக மிக முக்கியம். மாநாட்டிற்காக அவர்கள் மேற்கொள்ளும் நீண்ட தூரப் பயணம், அவர்களுக்கு உடல்ரீதியாகச் சிரமத்தை ஏற்படுத்தக் கூடும். அதனால், அவர்கள் இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வர வேண்டாம் என்றே அவர்களின் குடும்ப உறவாகவும் இருக்கும் உரிமையில் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஊடக மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக தங்கள் வீடுகளில் இருந்தே



நமது வெற்றிக் கொள்கைத் திருவிழாவில் கலந்து கொள்ளலாம் என்றும் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாநாட்டுக்கு வருகின்ற மற்ற அனைவரும், மாநாட்டுக்கு வந்து செல்லும்போது, பாதுகாப்புடன் பயணிப்பது மிக மிக முக்கியம். அதேபோல பயண வழிகளில் அரசியல் ஒழுங்கையும் நெறிமுறைகளையும் போக்குவரத்து விதிமுறைகளையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

நாம் எதைச் செய்தாலும், அதில் பொறுப்புணர்வுடன் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டையும் காப்போம் என்பதை உணர்த்துமாறு செயல்பட்டால் தான் நம் செயல்கள் மிக நேர்த்தியாக அமையும். அரசியலுக்கும் அது பொருந்தும். நாம் எப்போதும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகவே இருக்க வேண்டும். எந்நாளும் இதை ஒரு கட்டுப்பாட்டு விதியாகவே கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வி.சாலை என்னும் விவேக சாலையில் சந்திப்போம்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# மொழியை வைத்து மக்களை இனியும் ஏமாற்ற முடியாது

## எல்.முருகன் விமர்சனம்



மொழியை வைத்து மக்களை இனி ஏமாற்ற முடியாது என மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கருத்து தெரிவிக்கையில்,

“ஆளுநரை திரும்ப பெற வேண்டும் என்று பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியது, முழுக்க முழுக்க மக்களை திசை திருப்பும் செயல். ‘இந்தி வாரம்’ என்பது மத்திய அரசின் அனைத்து துறைகளிலும் வழக்கமாக கடைபிடிக்கப்படுவதுதான். மத்தியில் தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி ஆட்சி 10 ஆண்டு காலம் இருந்தபோதும், அதில் திமுக அமைச்சர்கள் இருந்தது றைகளில் கூட இந்தி வாரம் கடைபிடிக்கப்பட்டது. தமிழை பாதுகாப்பதிலும், உலக அளவில் எடுத்துச் செல்வதிலும் முதன்மையாக இருக்கிறார் பிரதமர் மோடி.

சென்னை தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிகழ்ச்சியில், தமிழ்த்தாய் வாழ்த்து பாடலில் குழந்தைகள் செய்தது தவறு. அந்த தவறுக்கு அவர்கள் மன்னிப்பும் கேட்டுவிட்டனர். அப்படி இருக்க, அதில் ஆளுநரை சம்பந்தப்படுத்துவது, எந்த விதத்திலும் நியாயம், தர்மம் அல்ல. அவர் ஒரு சிறப்பு அழைப்பாளராக மட்டுமே அந்த விழாவில் கலந்து கொண்டார்.

மழை, வெள்ளத்தை சமாளிக்க தி.மு.க. அரசு சரியாக திட்டமிடவில்லை. ஒருநாள் மழையையே சரியாக கையாளவில்லை. இதில் இருந்து மக்களை திசைதிருப்ப, அரசியல் செய்ய வேண்டும் என்பதற்காக, தி.மு.க. – இண்டியா கூட்டணி இவ்வாறு செயல்படுகிறது. மொழியை வைத்து ஏமாற்ற இது 1967 இல்லை. மக்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றனர்.

‘இந்தி வாரம்’ நடத்த கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கும் திமுக நிர்வாகிகள், தாங்கள் நடத்தும் சி.பி.எஸ். பள்ளிகளில் இந்தியை பாடமாக வைக்க மாட்டோம் என்று கூறி, அப்பள்ளிகளை இழுத்து மூட தயாரா, எனவே மொழியை வைத்து மக்களை ஏமாற்றும் செயல்இனிமேல் நடக்காது. தி.மு.க. ஆக்கப்பூர்வமான அரசியலில் ஈடுபட்டு, மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும். “ – என்றார்.



# பெய்ரூட்டை அண்மித்த பகுதிகளில் தாக்குதல்களை நடத்திய இஸ்ரேல்

லெபனான் தலைநகர் பெய்ரூட்டை அண்மித்த பகுதிகளில் நேற்றைய தினம் 12 இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலிய இராணுவம் குடியிருப்பாளர்களை வெளியேறுமாறு எச்சரிக்கைகளை வழங்கிய சில நிமிடங்களில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சேதம் மற்றும் உயிரிழப்புகள் இன்னும் மதிப்பிடப்பட்டு வருகின்றன.

இந்த தாக்குதலில், ஒரு தொடர் மாடிக் கட்டடம் முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெஸ்புல்லாவின் ஆயுதக் கிடங்குகள் மற்றும் தாஹியில் உள்ள அதன் உளவுத்துறை தலைமையகத்தின் கட்டளை மையம் என்பவற்றைக் குறிவைத்ததாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.





# இஸ்ரேல் தாக்குதலில் காசாவில் சிறுவர்கள் உட்பட 73 பேர் பலி

வடக்கு காசாவில் உள்ள பெய்ட் லாஹியா நகரில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதல்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட குறைந்தது 73 பேர் உயிரிழந்துள்ளனர் என ஹமாஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று இரவு நடத்தப்பட்ட இந்த குண்டுத் தாக்குதல்களில் பலர் காயமடைந்துள்ளதுடன், மேலும் பலர் தாக்குதல்களுக்கு இலக்கான கட்டட இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியுள்ளனர் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இஸ்ரேலிய விமானத் தாக்குதல்கள் பல மாடி கட்டடத்தை குறிவைத்து, அருகிலுள்ள பல வீடுகளை சேதப்படுத்தியதாக காசா பகுதியில் உள்ள வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் தகவல் தொடர்பு மற்றும் இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளதால், பெய்ட் லாஹியாவில் மீட்பு முயற்சிகள் தற்போது தடைபட்டுள்ளதாக காசா சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, உயிரிழப்புகள் பற்றிய அறிக்கைகளை சரிபார்த்து வருவதாக இஸ்ரேல் கூறியதுடன், ஹமாஸ் அதிகாரிகளால் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்றும் அவை தமது இராணுவத்தின் தகவல்களுடன் பொருந்தவில்லை என்றும் கூறியது.





பக்கங்கள் 02
கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 20/10/2024

## றொறன்ரோவிற்கு புதிய பகுதி குறியீடு

றொறன்ரோவில் புதிய பகுதி குறியீடு (AreaCode) அறிமுகம் செய்யப்பட உள்ளது.

எதிர்வரும் ஆண்டு இந்த மாற்றம் செய்யப்பட உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

02

# ஹர்தீப் சிங் நிஜ்ஜார் வெளிநாட்டு தீவிரவாதி கனடா எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



**கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்ட ஹர்தீப் சிங் நிஜ்ஜார், வெளிநாட்டு தீவிரவாதி எனவும் போலி ஆவணங்கள் மூலம் அவர் எப்படியோ கனடா குடியுரிமை பெற்றுள்ளார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேக்சிம் பெர்னியர் குற்றம் சாட்டியுள்ளார்.**

**கனடாவில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார். அத்துடன் கொலையில் தொடர்பு இருப்பதாக கூறி, கனடாவுக்கான இந்திய தூதர் சஞ்சய் உட்பட 6 அதிகாரிகளை வெளியேற்றினார்.**

இந்தக் குற்றச்சாட்டுகளை இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்ததுடன், இந்தியாவில் இருந்து 6 கனடா தூதரக அதிகாரிகளை வெளியேற்றியது.

இந்த நிலையில், கனடாவின் எதிர்க்கட்சியான மக்கள் கட்சி தலைவர் மேக்சிம் பெர்னியர் தனது எக்ஸ் வலைதள வெளியிட்டுள்ள பதிவில்,

“கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்ட ஹர்தீப் சிங் நிஜ்ஜார், கனடா குடியுரிமை பெற்றவர். அவர் கனடா பிரஜை என்று கூறும் கட்டுக்கதைகளை பகிரங்கப்படுத்த வேண்டிய நேரம் இது. ஏனெனில் காலிஸ்தான் தீவிரவாதிதான் நிஜ்ஜார். அவர் ஒரு வெளிநாட்டு தீவிரவாதி. கடந்த 1997 ஆம் ஆண்டு முதல் கனடாவில் தஞ்சமடைய கேட்டு பல முறை நிஜ்ஜார் முயற்சித்துள்ளார். எனினும், அவருக்கு கனடா குடியுரிமை மறுக்கப்பட்டு வந்துள்ளது. ஆனாலும், எப்படியோ போலி ஆவணங்கள் மூலம் கடந்த 2007ஆம் ஆண்டு கனடா குடியுரிமை பெற்றுள்ளார். இது கனடா நிர்வாகத்தின் தவறு.

கனடாவில் போலியாக தஞ்சம் அடைந்தவர்கள் நாடு கடத்தப்படுவது போல், நிஜ்ஜாரையும் நாடு கடத்தியிருக்க வேண்டும். நிஜ்ஜார் கனடாகாரர் இல்லை. அவர் இறந்துவிட்டார். இப்போதாவது அவருடைய கனடா குடியுரிமையை ரத்து செய்து, நிர்வாக தவறை சரி செய்யவேண்டும். இது போன்ற தவறுகளை இப்போதாவது உணர்ந்து அவற்றை சரி செய்து இந்தியாவுடன் கனடா அரசு இணைந்து செயல்பட வேண்டும்.

கனடாவில் மற்ற சிக்கல்களை திசை திருப்பவே பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, நிஜ்ஜார் விவகாரத்தை பேசி வருகிறார். நிஜ்ஜார் விவகாரத்தில் உண்மையான ஆதாரங்கள் இருந்தால், அதற்கேற்ப அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நிஜ்ஜார் கொலையில் இந்திய அரசுக்கு தொடர்பு இருப்பது உண்மையாக இருந்தால், அது மிகப் பெரிய பிரச்சினை. அதை கனடா அரசு சரியான முறையில் கையாள வேண்டும். ஆனால், இதுவரை இந்தியாவுக்கு எதிரான எந்த ஆதாரத்தையும் பிரதமர் ட்ரூடோ சொல்லவில்லை. இது பிரச்சினைகளை திசை திருப்பவே ட்ரூடோ இப்படி பேசுகிறார் என்பதை காட்டுகிறது.”- என்று குறிப்பிட்டுள்ளார்.

# கனடாவில் விற்பனை செய்யப்படும் ஒருவகை உணவு குறித்து எச்சரிக்கை

கனடாவில் விற்பனை செய்யப்படும் ஒரு வகை பன்றி இறைச்சி வகைகள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனம் இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த ஜெல்லி போர்க், பன்றி இறைச்சியினால் உருவாக்கப்படும் ஒருவகை உணவு வகையாகும்.

இவற்றில் லிஸ்திரியா தாக்கம் ஏற்பட்டு இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே Wagener பண்டக்குறியைக் கொண்ட ஹேம் அண்ட் ஜெலி வகைகள் இவ்வாறு சந்தையிலிருந்து மீள பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி காலாவதியாகும் என முத்திரையிடப்பட்ட தொகுதியில் இவ்வாறு லிஸ்ட்டிரியா தாக்கம் ஏற்பட்டு இருக்கலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லிஸ்திரியா தாக்கத்திற்கு உள்ளான உணவு வகைகளில் நிறமாற்றமோ மணமோ தெரியாது எனவும் இதனால் பாதிப்பைக் கண்டுபிடிக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




குறிப்பாக கர்ப்பிணிகள் பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தியை உடையவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கு இந்த வகை உணவுகளினால் பாதிப்பு ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த வகை உணவை எவரேனும் கொள்வனவு செய்திருந்தால் அவற்றை உட்கொள்ள வேண்டாம் எனவும் வீசி விடுமாறும் கனடிய உணவு பரிசோதனை முகவர் நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

02

# குளித்துக்கொண்டிருந்தவரை கைது செய்தனர் பொலிஸார்

கனடாவில் குளித்துக்கொண்டிருந்த நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அறிமுகமில்லாத ஒருவரின் வீட்டின் குளியலறையை பயன்படுத்தி குளித்தார் என சந்தேக நபர் மீது பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தனது நண்பரின் வீடு என கருதி அந்த நபர் குளித்துள்ளார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவத்தின் போது எந்தவொரு பொருளும் களவாடப்படவோ அல்லது யாருக்கும் காயங்களோ ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டின் கதவுகளை உரிய முறையில் மூடி வைக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.



# மோசமான சைகை காட்டிய பெண் மீது பொலிஸில் புகார் கொடுத்த இந்தியர்

கனேடிய மாகாணமொன்றில் வீதியில் நடந்துசென்றுகொண்டிருந்த இந்தியர் ஒருவரைப் பார்த்து மோசமான சைகை காட்டிய பெண் மீது பொலிஸில் புகாரளிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ஒன்ராறியோவில் வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்திருக்கிறார் அஷ்வின் அண்ணாமலை என்னும் இந்தியர். அவர் கனேடிய குடியுரிமை பெற்றவர்.

அப்போது ஒரு பெண் அவரைப் பார்த்து மோசமான சைகை காட்டியுள்ளார்.

நான் உங்களை என்ன செய்தேன், நான் என் பாட்டுக்குச் சென்றுகொண்டு தானே இருக்கிறேன், நான் என்ன தவறு செய்தேன், அப்புறம் நீங்கள் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டுள்ளார் அஷ்வின்.

அவரது கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் திணறிய அந்தப் பெண், கெட்ட வார்த்தை சொல்லித் திட்டியுள்ளார்.

நீங்கள் உங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போங்கள் என்றும் கனடாவில் ஏராளம் இந்திய மாணவர்கள் இருக்கிறார்கள் எனவும் கூறியுள்ளார்.






அதற்கு அஷ்வின் நான் ஒரு கனேடிய குடிமகன், நான் ஒரு மாணவன் அல்ல எனக் கூற, அந்தப் பெண்ணோ, உங்கள் அம்மாவும் பாட்டியும் இந்தியர்கள்தானே என்று கூறியுள்ளார்.

அது குற்றமா என அஷ்னின் கேட்க, ஆம், ஏராளமான இந்தியர்கள் கனடாவை ஆக்கிரமித்துள்ளீர்கள் அது குற்றம்தான் என்கிறார் அந்தப் பெண். இப்படியே தொடர்கிறது அந்த வீடியோ.

இப்படிப்பட்ட விரும்பத்தகாத சம்பவங்களை ஆசிய நாட்டவர்கள் தொடர்ந்து சந்தித்து வருவதால், நடந்த சம்பவத்தை வீடியோவாக பதிவு செய்துள்ளார் அஷ்வின்.

இந்த வீடியோவை சமூக ஊடகமான எக்ஸில் அஷ்வின் வெளியிட்டுள்ளார். கனேடிய அரசியல்வாதிகள் சிலரும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் நடந்த சம்பவத்துக்காக அஷ்வினுக்கு ஆறுதல் கூறியுள்ளதுடன், வருத்தமும் தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன், வாட்டர்லூ பொலிசார் அஷ்வினை அணுக, அதைத் தொடர்ந்து அஷ்வின், நடந்த சம்பவம் குறித்து பொலிஸில் புகார் ஒன்றையும் பதிவு செய்துள்ளார்.

கனடா இந்திய தூதரக உறவுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இதுபோன்ற இனவெறுப்பு சம்பவங்கள் கனடாவில் சமீப காலமாக அதிகரித்துவருவது குறிப்பிடத்தக்கது.



## ரொறன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஆண்டு ரொறன்ரோ நகரம் புதிய பகுதி குறியீட்டைப் பெரும் என கனடிய வானொலி, தொலைக்காட்சி மற்றும் தொடர்பாடல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுமக்களுக்கு நினைவூட்டல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டு இந்த புதிய குறியீட்டு எண் அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்பொழுது நடைமுறையில் உள்ள 416, 647 மற்றும் 437 ஆகிய இலக்கங்களுடன் 942 என்ற இலக்கமும் இணைத்துக் கொள்ளப்பட உள்ளது.

எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதியுடன் புதிய நடைமுறை அமல்படுத்தப்பட உள்ளது.

கடந்த 2013 ஆண்டில் ரொறன்ரோவில் புதிய தொலைபேசி தொகுதி எண் 437 அறிமுகம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.